**செய்தி வெளியீடு எண்: 046** **நாள்: 19.01.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (19.1.2020) முகாம் அலுவலகத்தில், குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கி, தீவிர போலியோ சொட்டு மருந்து முகாமை தமிழ்நாட்டில் தொடங்கி வைத்து ஆற்றிய உரை**

---

தமிழ்நாட்டில் இன்று தீவிர போலியோ சொட்டு மருந்து முகாமை துவக்கி வைக்கும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று இருக்கின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களே,

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப. அவர்களே,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., அவர்களே,

சுகாதாரத்துறை உயர் அதிகாரிகளே,

நிகழ்ச்சியிலே பங்கு பெற்று இருக்கின்ற ரோட்டரி சங்கத்தின் நிர்வாகிகளே,

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று தங்களுடைய குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்குவதற்காக வந்திருக்கின்ற அத்தனை தாய்மார்களுக்கும்,

வருகை தந்திருக்கின்ற அனைவருக்கும்,

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களுக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலில் ஆண்டுக்கு இரண்டு முறை போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டு வந்தது. இன்றையதினம், தமிழகத்தில் போலியோ நோயால்

பாதிக்கப்படுகின்ற குழந்தைகள் முழுவதுமாக இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தினாலும், போலியோ நோய் வருவதற்கு முன்பு தடுக்க வேண்டும் என்ற காரணத்தினாலும், ஆண்டுக்கு ஒரு முறை போலியோ சொட்டு மருந்து குழந்தைகளுக்கு வழங்கி கொண்டு இருக்கின்றோம். குறித்த காலத்திலே வழங்கப்படுகின்ற காரணத்தினாலே, இன்றைக்கு தமிழகத்திலே 16 ஆண்டுகளாக போலியோ நோய் இல்லாத மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து இருந்து கொண்டு இருக்கிறது.

இன்றையதினம் சுமார் 2 லட்சம் பணியாளர்கள் இந்தப் பணியிலே ஈடுபடுத்தப்பட்டு இருக்கிறார்கள். சுமார் 43,051 மையங்கள் இன்றைக்கு இந்த சொட்டு மருந்து வழங்குகின்ற இடமாக தேர்வு செய்யப்பட்டு அந்த மையங்களில் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டு வருகிறது. அதோடு சுமார் 70 லட்சம் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

அதேபோல, சுமார் 1,000 நடமாடும் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. தொலைதூரம் மற்றும் எளிதில் செல்ல முடியாத இடங்களுக்கு சுகாதாரத் துறையை சேர்ந்த அதிகாரிகள் நேரில் சென்று அங்கிருக்கின்ற குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கிடவும், இந்த நோயை முற்றிலும் தடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் அரசு இந்த ஏற்பாட்டை செய்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், பேருந்து நிலையம், ரயில் நிலையம், விமான நிலையம் போன்ற பகுதிகளிலும் இந்த சொட்டு மருந்து வழங்குவதற்காக 1,652 **பயணவழி மையங்கள் (Transit Booths)** அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, இன்றைக்கு அனைத்து குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து வழங்க வேண்டும் என்ற அடிப்படையிலே அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

போலியோ சொட்டு மருந்து முகாம் தமிழ்நாட்டில் சிறப்பாக நடைபெறுவதால் இன்றைக்கு தமிழ்நாடு போலியோ நோய் இல்லாத மாநிலமாக திகழ்ந்து கொண்டு இருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஆங்காங்கே இருக்கின்ற மையங்களுக்கு அழைத்துச் சென்று போலியோ சொட்டு மருந்தை தங்கள் குழந்தைகளுக்கு கிடைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, பூமியில் இருந்து இந்த போலியோ நோயை முற்றிலும் ஒழிக்க அனைவரும் கைகோர்த்து செயல்படுவோம் என உறுதியேற்போம்.

போலியோ நோய் குழந்தைகளுக்கு ஏற்பட்டுவிட்டால் அது வாழ்நாள் முழுவதும் அந்தக் குழந்தை கஷ்டப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அரசாங்கம் இதற்கு ஒரு நல்ல ஏற்பாட்டை இன்றைக்கு செய்திருக்கின்றது. இந்த நல்ல ஏற்பாட்டை பெற்றோர்கள் பயன்படுத்தி தங்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்தை வழங்க வேண்டும் என்று அன்போடு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக மீண்டும் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த நிகழ்ச்சி சீரோடும், சிறப்போடும் நடத்துவதற்கு உறுதுணையாக இருந்த சுகாதாரத் துறைக்கும், இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஒளிபரப்புகின்ற ஊடகம் மற்றும் பத்திரிகை நண்பர்களுக்கும், இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்ற அனைவருக்கும் உளமார என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**